[1975 நவம்பர் 5

கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள்

*195 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களில் பெரும் பாலானவற்றைக் கலைத்துவிட வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) காரணங்கள்:

(1) போதிய அளவு நிலங்களை சங்கத்தால் ஒருங்கு படுத்த இயலாமை ;

(2) பாசனத்திற்கு ஏற்ற நீர் சங்கப்பகுதியில் கிடைககப் பெறுமை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களைக் கலைத்துவிட்டு வேறு எந்த வகையிலே அவற்றிற்கு மாற்று அமைக்க அரசு ஆலோசித்து வருகிறது அல்லது செயல்படுத்தி வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : நாம் உதவி செய்தால் எந்தெந்தச் சங்கம் செயல்படுமோ, செயல்படத் தகுதி இருக்குமோ அவற்றை வைத்துக்கொண்டு மற்றவை தேவையில்லை யென்று கலைக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த மாநிலத்திலே எத்தனை லிஃப்ட் இரிகேஷன் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன, எத்தனை கலைக்கப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இதுவரை 2,442 சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 890 இப்பொழுது செயல்பட திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 1,552 சொஸைட்டிகளைக் கலைத்து விடலாமா என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

1975 நவம்பர் 5]

திரு. என். டென்னிஸ்: இப்பொழுது பல லிஃப்ட் இரிகேஷன் சொஸைட்டிகள் ஃபங்க்ஷன் செய்யாமல் டார்மன்ட் ஸ்டேஜிலே இருக்கின்றன. அவைகளின் ஓர்க்கிங் காப்பிட்டலை அதிகரித்து, அவை எஃபக்டிவாக ஃபங்க்ஷன் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: அதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எவை எவற்றிற்குப் பணம் கொடுத்தால் செயல்படுமோ அவற்றைச் செயல்படுத்துவதென்றும், எவை எவற்றிற்குப் பணம் கொடுத்தாலும் செயல்பட முடியாதோ அவற்றைக் கலைத்து விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்பொழுது கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன? ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைக்கப்பட்ட இருக்கிற சங்கங்கள் எத்தனை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: ஆரம்பிக்கப்பட்டவை: செங்கற்பட்டு—182 சங்கங்கள், வட ஆற்காடு—150, (ரீஜினைச் சொல்கிறேன்) தென்னாற்காடு 211, சேலம், தர்மபுரி—331, கோயம்புத்தூர், நீலகிரி—371, தஞ்சாவூர்—203, திருச்சி, புதுக்கோட்டை—352, மதுரை, இராமநாதபுரம்—406, திருநெல்வேலி, கன்னியாகுமரி—236. செயல்பட்டுக் கொண்டிருப்பவை: செங்கற்பட்டு—38 சங்கங்கள், வட ஆற்காடு—50, தென்னாற்காடு—137, சேலம்—86, தர்மபுரி—43, கோயம்புத்தூர், நீலகிரி—34, தஞ்சாவூர்—98, திருச்சி, புதுக்கோட்டை—137, மதுரை—33, இராமநாதபுரம்—55, திருநெல்வேலி—179—இந்தச் சங்கங்கள் இப்பொழுது செயல்படுவதற்கான திட்டங்களையெல்லாம் வகுத்து ஏற்பாடாகி இருக்கிறது.

திரு. செ. சதாசிவம்: பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் பல சங்கங்கள் சர்வே செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, பணம் ஒதுக்கப்படவில்லையென்று சொல்கிறார்கள். அவை எப்பொழுது துவங்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : குறிப்பிட்ட சங்கத்தைப் பற்றிக் கேட்பதால் தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலின்போது, சுமார் 2,000 சங்கங்களைக் கலைக்க முடிவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களைத் துவக்குவது என்ற அறிவிப்பு வந்தவுடன் எல்லா இடங்களிலும் உற்சாகமிருந்தது, நிறைய சங்கங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று விளம்பரம் செய்தார்கள். இருந்தாலும் எந்த அளவிலே விளம்பரம் செய்யப்பட்டதோ, அந்த அளவிலே செயல்படாமல் இருக்க, ஊக்குவிக்கப்படாமையும், அதுபோல், சங்கங்களைக் கலைப்பதற்கு பங்குதாரர்கள் மற்றவர்கள் எல்லாம் தொல்லைகள் கொடுத்ததுதான் காரணம் என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். இதிலே இருக்கிற உண்மை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : சங்கம் ஆரம்பிக்கப்பட்டதே சிறு விவசாயிகளை ஊக்குவிக்கத்தான். மிக வேகமாக 2,442 சங்கங்களை ஏற்படுத்தினோம். ஆனால், அவற்றிற்கு அங்கங்கே தண்ணீர் கிடைக்க வேண்டும். அதன்னியில் 100 ஏக்கர் பரப்பு ஒவ்வொன்றிற்கும் இருக்கவேண்டும். ஆகவே, திட்டத்தை வேகமாகத் துவக்கியதாலே 800-க்கு மேற்பட்ட சங்கங்கள் இப்பொழுது செயல்படக்கூடிய நிலையிருக்கிறது. மற்ற சங்கங்களை ஆரம்பிக்க முடியாத நிலையிருப்பதற்கு சர்க்காருடைய சக்திக் குறைவு காரணமல்ல. அங்கே தண்ணீர் கிடைக்கவில்லை. அவை மேலும் செயல்பட முடியாது என்ற காரணத்தாலே, அந்தச் சங்கங்களைக் கலைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே லிஃப்ட் இரிகேஷன் சங்கம் இருக்கிறது. ஆனால் லிஃப்ட் இரிகேஷனே கிடையாது. அந்தக் காரணத்தை வைத்து, அந்தச் சங்கத்தைக் கலைத்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அநேகமாக திட்டத்தில் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, சிறு விவசாயிகள் தனியாக பம்ப் செட்டுகள் அமைக்க முடியாது, கிணறு வெட்ட முடியாது என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதன் காரணமாக,

1975 நவம்பர் 5]

இந்தச் சங்கம் அமைக்கப்பட்டது. ஆகவே, அதைக் கலைப்பதைவிட, அரசாங்கமே பம்ப் செட் வைத்து, அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்து அதன் மூலமாக வரி வசூலிக்கின்ற திட்டம் ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா? அதற்காக உலக வங்கியிடம் ஏதாவது கடன் பெறுகிற திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, எந்த வங்கியிலே பணம் பெற்றாலும் தண்ணீர் கிடைத்து விவசாயத்திற்குப் பயன்படும் என்று தெரிந்தால் **அந்தத் திட்டத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயத்**தைப் பொறுத்தவரையில் சர்க்கார் விடுவதாக இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களை நிச்சயமாக சர்க்கார், விட்டு வந்தது போக மீதியிருந்தால் நடத்தத் தயாராக இருக்கும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைப்பதற்கான காரணங்களில் ஒன்றாக **தண்ணீர்** கிடைக்கவில்லை என்பதைச் சொன்னார்கள். இந்த ஆண்டு பருவ மழை ஓரளவு பெய்திருப்பதால் ஏற்கனவே ஒருவேளை கலைக்க முடிவு எடுத்திருந்தாலும் இப்பொழுது தண்ணீர் கிடைக்க வாய்ப்பிருப்பதால் மீண்டும் அதைப் பரிசீலிக்க அரசு முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, திடீர் திடீரென்று கேணியிலே தண்ணீர் வரும் என்று சொல்ல முடியாது. நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க வேண்டும், **விவசாயத்திற்கான தண்ணீரை பம்பு செட்டு வைத்து கொண்டு** வர வேண்டும். மழைநீர் மட்டும் போதாது. கீழே அடி நீர் எந்த நேரமும் கிடைத்து மோட்டார்களுக்கு எந்த நேரமும் தண்ணீர் சப்ளை கொடுக்கக்கூடிய சாத்தியமுள்ள இடங்களில் கேணி வெட்ட முடியுமே தவிர மழையை நம்பி மட்டும் செய்ய முடியாது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்படிப் பதிவு செய்யப்பட்ட பெருவாரியான சங்கங்களைக் கலைப்பதை மறுபரிசீலனை செய்து, மாவட்டங்களில் தனி அதிகாரிகளை நியமித்து,

அவர்கள் ஒவ்வொரு சங்கத்திற்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று தீவிரமாக ஆலோசித்து எவை எவை இயங்க முடியும் என்று பார்த்துச் செய்ய அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, ஏதோ சாதாரணமான பரிசீலனையில் நின்றுவிட்டது என்று உறுப்பினரவர்கள் கருதுகிறார்கள். ரொம்பவும் நிதானமாக, திறமையான அதிகாரிகளையெல்லாம் போட்டு கிரவுண்ட் வாட்டர் ஸ்கீமின் என்ஜினியரை வைத்துப் பரிசீலித்துத்தான் இனி இது செயல்பட முடியாது என்பதால் கலைக்கப்பட்டது.

திரு. ந. நாச்சியப்பன்: தலைவரவர்களே, இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தில் கிணறு வெட்ட 5 செண்ட் நிலம் குறைந்தது வேண்டுமென்று சொல்கிறார்கள். 5 செண்ட் நிலத்தையும் அவர்கள் சங்கத்திற்கு இனமாக வழங்க வேண்டும் அல்லது சங்கம் கிரயத்திற்கு வாங்கவேண்டும். இல்லையென்றால் புறம்போக்கில் கிணறு வெட்ட வேண்டுமென்று கூறப்படுகிறது. அந்தச் சங்கத்திலிருந்து கிரயத்திற்கு வாங்குவதற்கான நிதிநிலை இல்லை. எனவே, சாதாரண புறம்போக்கிலுள்ள நிலத்தை துணைப் பதிவாளர் மூலம் கேட்டால் 6 மாதங்களாகியும் கிடைக்கவில்லை. அது விரைவில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதற்கு இப்பொழுது கொண்டுவரப்பட்டதைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், 100 ஏக்கர்கள் ஒரு சங்கத்திற்கு இருந்தால் கிணறு வெட்ட ஏற்பாடு செய்வதாகக் கூறுகிறார்கள். இதில் மானியம் கொடுத்தால் சில விவசாயிகள் ஏற்றுக் கொள்கிறார்கள். முழுவதையும் கடனாகப் பெற்றால் அவர்களுக்குக் கஷ்டம் என்பதால் சங்கமே அந்தக் கிணற்றை வெட்டிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் பலயிடங்களில் நல்லதாக இருக்கும். விவசாயிகளுக்கு விரைவில் அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மானியம் என்று எதிலிருந்து எடுத்துக் கொடுப்பது என்று புரியவில்லை. ஆகவே, 100 எக்கர்கள் என்று வைத்து, அந்தச் சங்கத்தில் கடனை வாங்கி விவசாயம் செய்து அந்தக் கடனைக் கட்டிவிடும் வகையில், அவர்களுக்கு வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் காரியமாகச் செய்ய முடியுமே தவிர, பரந்த இந்தத் திட்டத்திலே மானியமாகக் கொடுத்து உதவி செய்ய சர்க்காரின் நிதிநிலை போதாது.

திரு. வீ. பழனிவேலு: தலைவரவர்களே, இந்தச் சங்கம் நீர் வளம் உள்ள பகுதியில் மட்டும் ஏதுவாக இருக்கிறது. வறட்சிப் பகுதிகளான சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் இம் மாதிரி சங்கங்கள் செயல்பட முடியவில்லை. இப்படிப்பட்ட வறட்சி மாவட்டங்களிலெல்லாம் இந்தச் சங்கத்தைப் பயன் படுத்த முடியாமல் இருக்கும் நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, நிலத்தடி நீர் கிடைக்காத இடங்களில் அங்கங்கே சிறு குட்டைகளை அமைக்கவோ அல்லது வேறு ஏதாவது திட்டங்களோ இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் சேலத்தில் அவ்வளவு குறைவாக இல்லை. சேலத்தில் 86 சங்கங்கள் செயல்படுகின்றன, வடார்க்காட்டில் 50 சங்கங்கள்தான் செயல்படுகின்றன, தஞ்சாவூரில் 98 சங்கங்கள்தான் செயல்படுகின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில்தான் பதில் சொல்ல முடியுமே தவிர உறுப்பினர் சொல்லும் யோசனையை வேறு திட்டத்திலே வைத்துப் பரிசீலிக்கலாம்.

கும்முடிப்பூண்டி மீனவர் முறையீடு

* 196 வின.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் தொகுதியில் உள்ள கடலோர மீனவர்களின் மேம்பாடு பற்றிய கோரிக்கை மனுவை அத்தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் 5—8—1974 அன்று அரசுக்கு தந்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?